முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1422

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.08.2023**, திங்கட்கிழமை

1. பார்காக்க வந்தருளும் ஞானகுருவே
பரம ஆனந்த சதாசிவ சற்குருவே
சீர்திருத்தம் செய்து இந்த பேருலகை
சித்திமிகு ஞான உலகமாக மாற்ற
2. மாற்றவந்த ஆறுமுக அரங்கனே
மாதவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஆற்றல்பட ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சோபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 04 ம் நாள், 21.08.2023 திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கன் பலம் உலகை ஆளும்
தக்கபடி அரங்கன் பெற்று வந்த வரம்
மண்ணுலகமெல்லாம் தர்மமாக மகாசக்தியாக வலம்வந்து
மக்களை எல்லாம் ஞான வழிக்கு மாற்றி
4. மாற்றியே அளவில்லா தர்ம கிளைசங்கங்கள்
ஆங்காங்கே சக்தியாக உருவெடுத்து
உருவெடுத்து இந்த பேருலகில் உத்தமமாக தர்மஞான ஆட்சி காலத்தை
உகந்தபடி அரங்கன் நோக்கமாக நிறைவேற்றும்
5. ஆகவே கலியுக மக்கள் அரங்கன் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
ஆற்றல்பட அரங்கன் தருகின்ற வரமான
மாற்றம் தரும் சடாட்சர தீட்சை முறை
மண்ணுலகில் ஏற்று தொடர் ஜெபதபங்கள்
6. ஜெபதபங்கள் செய்து கொண்டு வருகவருக
சித்திமிகு ஞான லோகமாற்றம்
அபயமென ஆறுமுகன் என்னாசியோடு
அகிலமெங்கும் அடைந்து ஞான ஆட்சிக்காலம்

7. காலமதும் அரங்கன் தொண்டர்படை கொண்டு
கலியுகத்தில் மாற்றம் முருகன் யான் தருவேன்
வேலவன் என் வழிபாடு இன்னும் பெருகப்பெருக
வெற்றிமுகம் கலியுகத்தில் அரங்கனால் தானே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–